புத்தசபசனம் , சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

டவர் மண்டப அரங்க மன்றம்

## டவர் நாடக பாடசாலை நாடக அரங்கியல் இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறி

## 2024/2025 கல்வி வருடத்திற்காக மாணவர்களை உள்வாங்குதல்-2024

டவர் மண்டப அரங்க மன்றத்தின் நாடக பாடசாலை ஊடாக 02 ஆண்டுகள் முழு நேர நாடக அரங்க உயர் நிலை டிப்ளோமா பாடநெறி 2024/2025 கல்வி ஆண்டிற்கான மாணவர்களை உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோறப்படுகின்றன.

1.0 **நாடக அரங்கியல் இரு வருட முழுநேர உயர் டிப்ளோமா**

1.1 டவர் மண்டப அரங்க மன்றத்தின் கீழ் நடத்தப்படும் நாடக பாடசாலை ஊடாக தமிழ் மொழி மூலமான இரு வருட முழு நேர நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறி தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியானது இலங்கை கல்வித்தகுதி கட்டமைப்பின் (SLQF) 3 மற்றும் 04 ஆம் தரங்களை உள்ளடக்கியது. (SLQF) தரம் 4 நாடக நிகழ்த்து கலை தொடர்புடைய உயர் டிப்ளோமாவை வழங்குகிறது.

1.2 இவ் உயர் டிப்ளோமா பாடநெறிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு சிறந்த தகுதி அடிப்படையில் நாடக அரங்கியல் பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

1.3 இவ் நடைமுறை நேர்முகத் தேர்வானது நாடகம் மற்றும் அரங்கக் கலை நிகழ்ச்சிகள் தொடர்பான ஒரு கட்டமைக்கப்பட்டிருக்கும்.

1.4 இப் பாடநெறியானது தமிழ் மொழியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

1.5 இப் பாடநெறிக்கு மாணவர்களுக்கு தங்கும் இட வசதி வழங்கப்பட மாட்டாது.

2.0 **பாடநெறிக்கான தகுதிகள்**

2.1 கல்வித் தகைமை

(அ). க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ், கணிதம், அழகியல் ஆகிய 03 பாடங்களுடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த (உ.த) பரீடசையில் இரு வருடங்களுக்கு மேற்படாதவாறு ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் 03 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ). இப் பாடநெறிக்கு மாணவர்களை தேர்நதெடுக்கும்போது (க.பொ.த.உ.த) பிரிவில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை படித்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2.2 2024.01.31 ஆம் திகதி அன்று விண்ணப்பத்தாரியின் வயது 19 வயதுக்கு குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

2.3 குறிப்பிட்ட பாடநெறியில் நாடகம் மற்றும் அரங்கக் கலைகள் தொடர்பான பயிற்சிகள் உள்ளன. இப் பாடநெறிக்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் பாடநெறியினை தொடங்குவதற்கு சிறந்த உடல், நல ஆரோக்கியம் உள்ளது என அரச மருத்துவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பிக்கக வேண்டும்.

3.0. **பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோறுதல்**

3.1 விண்ணப்பக் கட்டடணமாக 2000.00 விண்ணப்பத்தாரியின் ஊடாக - ஹயிற்பார்க் (Bank of Ceylon - Hyde Park) இலங்கை வங்கிக் கிளைக் கணக்கு இலக்கம் 2327541, டவர் மண்டப அரங்க மன்றம் - என்னும் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை ஒட்டி அனுப்பாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப் படிவங்கள் எந்த வித முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். எக் காரணம் கொண்டும் வைப்பிலிட்ட பணம் திரும்பிச் செலுத்தப்படமாட்டாது.

3.2 அனைத்து விண்ணப்பப் படிவங்களும் 15.02.2024 அதாவது அதற்கு முன் திகதிகளில் பதிவுத்தபாலில் **பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு - 07** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். டவர் அரங்க மன்றம் தாமதமான அல்லது தொலைந்து போன விண்ணப்பங்களுக்கு பொறுப்பாகாது.

3.3 விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறி - 2024** (தமிழ்மொழி) எனக் குறிப்பிடல் வேண்டும்.

4.0 **மாணவர்களை உள் வாங்கும் முறை**

4.1 விண்ணப்பங்கள் அனுப்பும் விண்ணப்பத்தாரிகளின் கல்விப் பெறுபேறுகளின் அடிப்படையில் 100 மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத்தேர்வின் போது விண்ணப்பத்தாரர்களது ஏனைய விசேட இணைப்பாடவிதான செயற்பாடுகளின் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படும்.

4.2 நேர்முகத்தேர்வு, செயல்முறை பயிற்சிகளில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற 60 மாணவர்கள் இப்பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

4.3 பாடநெறிக்கட்டணம்

| | | |
|---|---|---|
| 01 | பாடநெறிக்கான ஆரம்பப் பதிவுக் கட்டணம் | 55000.00 |
| 02 | மிகுதிப் பணம் 03 தவணைகளின் அடிப்படையில் செலுத்தலாம். இது (25000.00x3) தவணைப் பரீட்சைக்கு முன்பதாக செலுத்த வேண்டும். | 75000.00 |
| 03 | பாடநெறிக்கான முழுக் கட்டணம் | **130000.00** |

05. மாதிரி விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்களை தரவிறக்கம் செய்யலாம்.